வழிபாட்டுக்குரிய பிரபந்தத்திரட்டு



கழக வெளியீடு

கழக வெளியீடு: எகூ

ஸ்ரீ

வழிபாட்டுக்குரிய
பிரபந்தத்திரட்டு

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

பதிப்புரை

மக்களை மாக்களினின்றும் பிரிப்பது அறிவு. அவ்வறிவில் தக்க இன்ன தகாதன இன்னவென்றறியும் தன்மையதையே பகுத்தறிவென்பர்.

பகுத்தறிவு பெற்ற மக்கள், தம் அறிவின் மதுகையால் மன மொழி மெய்களைக் கடந்த ஒரு பொருள் உண்டென உணர்ந்தனர். அப்பொருளையே கடவுளெனக் கொண்டனர்; இவ் விறைவனுக்குக் குணங்குறி கண்டனர்; இரக்கமும் நீர்வண்ணமும் கொண்ட ஒருருவே திருமால் உருவெனக் கொண்டு வழிபட்டனர். இப்பெருமானைப் 'பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே' என, சங்ககாலப் பரிபாடல் போற்றிப் பகர்கின்றது.

இப்பெருமான் திருவருள் பெற்ற ஆழ்வார்கள் தோன்றித் திருமாற் பெருமான்மீது பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாக்கள் பல திருவாய்மலர்ந்தருளினர். அவைகளின் தொகுப்பே திவ்வியப் பிரபந்தமெனப் பெயரிய மறைமொழி நூலாகும்.

இது தமிழின் அருமறையாய், ஓதற்கெளிதாய், உன்னற்கரிதாய், ஓதினர் உள்ளங்கரைக்கும் ஒண்மையதாய், உண்மையதாய்க், கருங்கல் மனத்தையும் உருக்கும் கனிவுடைத்தாய்த் திகழ்வது.

இவ்வருட்பனுவலில் பொறுக்குமணிபோல் ஆய்ந்து தெளித்தெடுத்து '**வழிபாட்டுக்குரிய பிரபந்தத் திரட்டு**' என்னும் பெயரால் தொகுத்து, நூலுருவாக்கி வெளியிட்டுள்ளோம். இதனைத் தொகுத்துதவிய **திருவாட்டியார் பண்டிதை, எஸ். கிருஃச்ண வேணி அம்மையா**ரவர்கட்கு எம் மனமுவந்த நன்றி.

இந்நூலைத் தமிழ்மக்கள் யாவரும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் திருமாற் பெருமான் திருக்கோவில்களிலும், தத்தம் இல்லங்களிலும் ஓதி உணர்ந்து வழிபாடு செய்து, எல்லாம்வல்ல திருமாற் பெருமான் திருவருள் பெற்று ஆக்கமும் ஊக்கமும் அடைந்து இன்புற வேண்டுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

அப்பர் அச்சகம், சென்னை 1.—II-E. C. 15200/12-1954.

ஸ்ரீ

ஸ்ரீமதே இராமாநுசாய நம:



வழிபாட்டுக்குரிய

பிரபந்தத் திரட்டு

இராமாநுசர் வணக்கம்

பூமன்னு மாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த
பாமன்னு மாறன் அடிபணிந் துய்ந்தவன் பல்கலையோர்
தாம்மன்ன வந்த இராமா நுசன்சர ணாரவிந்தம்
நாம்மன்னி வாழ,நெஞ் சேசொல்லு வோம்அவன் நாமங்களே. 1

—திருவரங்கத்தமுதனார்.

ஆழ்வார்கள் வணக்கம்

ஊழிதொறும் ஊழிதொறும் உலகம் உய்ய
உம்பர்களும் கேட்டுய்ய அன்பி னாலே
வாழியெனும் பூதம்பேய் பொய்கை மாறன்
மழிசையர்கோன் பட்டர்பிரான் மங்கை வேந்தன்
கோழியர்கோன் தொண்டர்துகள் பாணன் கோதை
குலமுனிவன் கூறிய நா லோதி வீதி
வாழியென வரும்திரளை வாழ்த்து வார்தம்
மலரடியென் சென்னிக்கு மலர்ந்த பூவே. 2

—பின்பழகராம் பெருமாள்ஜீயர்.

திருமால் வணக்கம்

மின்னுருவாய் முன்னுருவில் வேத நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்ப்
பின்னுருவாய் முன்னுருவில் பிணிமூப் பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூதம் ஐந்தாய்ப்
புனலுருவாய் அனலுருவில் திகழுஞ் சோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
தளிர்புரையும் திருவடியென் தலைமே லவே. 3

—திருமங்கையாழ்வார்.

திருமால் முதன்மை

உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே. 4

—நம்மாழ்வார்.

க. பெரியாழ்வார்

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு. 5

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்அப் பாஞ்சசன் னியமும் பல்லாண்டே.

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்
அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்
செங்கண் கருமுகிலே தாலேலோ
தேவகி சிங்கமே தாலேலோ. 7

கண்ணபிரான் குழலூதற் சிறப்பு

சிறுவிரல் கள்தட விப்பரி மாறச்
 செங்கண்கோ டச்செய்ய வாய்கொப் பளிப்ப
குருவெயர்ப் புருவம் கூட லிப்பக்
 கோவிந்தன் குழல்கொ டூதின போது
பறவையின் கணங்கள் கூடு துறந்து
 வந்துசூழ்ந் துபடு காடு கிடப்ப
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
 கவிழ்ந்திறங் கிச்செவி யாட்ட கில்லாவே. 8

அரங்கனைப் போற்றல்

துப்புடை யாரை அடைவ தெல்லாம்
 சோர்விடத் துத்துணை யாவ ரென்றே
ஒப்பிலே னாகிலும் நின்ன டைந்தேன்
 ஆனைக்கு நீயருள் செய்த மையால்
எய்ப்பென்னை வந்து நலியும் போதங்
 கேதும்நா னுன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
 அரங்கத் தரவணைப் பள்ளி யானே. 9

நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன்
 நார ணாஎன்னும் இத்தனை அல்லால்
புன்மை யால்உன்னைப் புள்ளுவம் பேசிப்
 புகழ்வான் அன்றுகண் டாய்திரு மாலே
உன்னு மாறுஉன்னை ஒன்றும் அறியேன்
 ஓவா தேநமோ நாரணா என்பன்
வன்மை யாவதுஉன் கோயிலில் வாழும்
 வைட்ட ணவன் என்னும் வன்மைகண் டாயே. 10

உ. ஆண்டாள்

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேர்இழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்

ஏர்ஆர்ந்த கண்ணி எசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய். 11

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினுல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய். 12

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போல
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித் தியனும் எழுந்தார்போல்
அங்கண் இரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 13

அன்றிவ் வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய் திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். 14

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்ருமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது

இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னேடு(டு)
உற்றேமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 15

மென்னடை அன்னம் பரந்துவிளை யாடும்
வில்லிபுத் தூருறை வான்தன்
பொன்னடி காண்பதோர் ஆசையி னுல்என்
பொருகயல் கண்இணை துஞ்சா
இன்னடி சில்லொடு பால்அமு தூட்டி
எடுத்தஎன் கோலக் கிளியை
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே
உலகளந் தான்வரக் கூவாய். 16

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே. 17

௩. குலசேகரப்பெருமாள்

அளிமலர்மே லயனரனிந் திரனேடிணை
அமரர்கள்தம் குழுவும்அரம் பையரு மற்றும்
தெளிமதிசேர் முனிவர்கள்தம் குழுவு முந்தித்
திசைதிசையில் மலர்தூவிச் சென்று சேரும்
களிமலர்சேர் பொழிலரங்கத் துரக மேறிக்
கண்வளரும் கடல்வண்ணர் கமலக் கண்ணும்
ஒளிமதிசேர் திருமுகமும் கண்டு கொண்டேன்
உள்ளமிக வென்றுகொலோ உருகு நாளே. 18

மறம்திகழும் மனமொழித்து வஞ்ச மாற்றி
வன்புலன்கள் அடக்கியிடர்ப் பாரத் துன்பம்
துறந்(து) இருமுப் பொழுதேத்தி எல்லை யில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறந்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
அணியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
நிறந்திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்
நீர்மல்க வென்றுகொலோ நிற்கு நாளே. 19

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாங்குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக்களிப்போ டழுத கண்ணீர்
மழைசோர நினைந்துருகி ஏத்தி நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும்
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
போராழி அம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே. 20

பேய ரேஎனக்கு யாவரும் யானுமோர்
பேய னேஎவர்க் குமிது பேசியென்
ஆய னேஅரங்கா என்றழைக் கின்றேன்
பேய னாயொழிந் தேனெம்பி ரானுக்கே. 21

ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே. 22

செடியாய வல்வினைகள் தீர்க்குந் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே. 23

கண்டாரி கழ்வனவே காதலன்றான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்
விண்டோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட் டம்மாநீ
கொண்டாளா யாகிலும்உன் குரைகழலே கூறுவனே. 24

சுற்றமெலாம் பின்தொடரத் தொல்கான மடைந்தவனே
அற்றவர்கட் கருமருந்தே அயோத்திநகர்க் கதிபதியே
கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே
சிற்றவைதன் சொல்கொண்ட சிராமா தாலேலோ. 25

தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே
யாவரும்வந் தடிவணங்க அரங்கநகர்த் துயின்றவனே
காவிரிநல் நதிபாயும் கணபுரத்தென் கருமணியே
ஏவரிவெஞ் சிலைவலவா இராகவனே தாலேலோ. 26

ச. திருமழிசையாழ்வார்

சுரும்பரங்கு தண்துழாய் துதைந்தலர்ந்த பாதமே
விரும்பிநின் றிறைஞ்சுவேற்கு இரங்கரங்க வாணனே
கரும்பிருந்த கட்டியே கடல்கிடந்த கண்ணனே
இரும்பரங்க வெஞ்சரம் துரந்தவில்லி ராமனே. 27

ஊனின்மேய ஆவிநீ உறக்கமோ டுணர்ச்சிநீ
ஆனில்மேய ஐந்தும்நீ அவற்றுள்நின்ற தூய்மைநீ
வானிேடும் மண்ணும்நீ வளங்கடற் பயனும்நீ
யானும்நீய தன்றியெம் பிரானும்நீ இராமனே. 28

அத்தனகி அன்னையாகி ஆளும்எம்பி ரானுமாய்
ஒத்தொவ்வாத பல்பிறப் பொழித்துநம்மை ஆட்கொள்வான்
முத்தனர் முகுந்தனர் புகுந்துநம்முள் மேவினர்
எத்தினல் இடர்க்கடல் கிடத்தியேழை நெஞ்சமே. 29

அவனென்னை யாளி அரங்கத் தரங்கில்
அவனென்னை எய்தாமல் காப்பான்—அவனென்ன(து)
உள்ளத்து நின்ரு னிருந்தான் கிடக்குமே
வெள்ளத் தரவணையின் மேல். 30

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்—வேங்கடமே
தானவரை வீழத்தன் ஆழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை. 31

ரு. தொண்டரடிப்பொடியாழ்வார்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே. 32

வண்டினம் முரலும் சோலை மயிலினம் மாலும் சோலை
கொண்டல்மீ தணவும் சோலை குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோ னமரும் சோலை அணிதிரு வரங்க மென்னு
மிண்டர்பாய்ந் துண்ணுஞ் சோற்றை விலக்கிநாய்க் கிடுமி னீரே.

குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவு ளெந்தை அரவணைத் துயிலுமா கண்டு
உடலெனக் குருகு மாலோ என்செய்கேன் உலகத் தீரே. 34

ஊரிலேன் காணி இல்லை உறவுமற் றொருவ ரில்லை
பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ண னேஎன் கண்ணனே கதறு கின்றேன்
ஆருளர் களைக ணம்மா அரங்கமா நகரு ளானே. 35

மனத்திலோர் தூய்மை இல்லை வாயிலோர் இன்சொல் இல்லை
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளி விளிவன் வாளா
புனத்துழாய் மாலை யானே பொன்னிசூழ் திருவ ரங்கா
எனக்கினிக் கதியென் சொல்லாய் என்னையா ளுடைய கோவே.

அடிமையில் குடிமை இல்லா அயல்சதுப் பேதி மாரில்
குடிமையில் கடமைப் பட்ட குக்கரில் பிறப்ப ரேலும்
முடியினில் துளபம் வைத்தாய் மொய்கழற் கன்பு செய்யும்
அடியரை உகத்தி போலும் அரங்கமா நகரு ளானே. 37

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலர் எல்லாம்
வானவர் அரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மாபள்ளி எழுந்தரு ளாயே. 38

சு. திருப்பாணாழ்வார்

ஆலமா மரத்தின் இலைமே லொருபா லகனாய்
ஞால மேழுமுண்டா னரங்கத் தரவி னணையான்
கோல மாமணி யாரமும் முத்துத் தாமமும் முடிவில்ல தோரெழில்
நீல மேனியையோ நிறைகொண்டதென் நெஞ்சினையே. 39

கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்மற் றொன் றினைக் காணாவே. 40

எ. மதுரகவியாழ்வார்

கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணி யபெரு மாயன், என் அப்பனில்
நண்ணித் தென்குரு கூர்நம்பி என்றக்கால்
அண்ணிக் குமமு தூறுமென் நாவுக்கே. 41

திரிதந் தாகிலும் தேவர் பிரானுடை
கரிய கோலத் திருவுருக் காண்பன் நான்
பெரிய வண்குரு கூர்நகர் நம்பிக்காள்
உரிய னாயடி யேன்பெற்ற நன்மையே. 42

நம்பி னேன்பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பி னேன்மட வாரையும் முன்எலாம்
செம்பொன் மாடத் திருக்குரு கூர்நம்பிக்கு
அன்ப னாயடி யேன்சதிர்த் தேனின்றே. 43

இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன்புகழ் ஏத்த அருளினான்
குன்ற மாடத் திருக்குரு கூர்நம்பி
என்றும் என்னை இகழ்விலன் காண்மினே. 44

அ. திருமங்கையாழ்வார்

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோ
டவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். 45

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். 46

மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள்கலி கன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வநன் மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போ தழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராய ணாஎன்னும் நாமம். 47

முதுகு பற்றிக் கைத்த லத்தால் முன்னொரு கோலூன்றி
விதிர்வி திர்த்துக் கண்சுழன்று மேற்கிளை கொண்டிருமி
இதுவென் னப்பர் மூத்த வாறென் றிளையவர் ஏசாமுன்
மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரிவ ணங்குதுமே. 48

தெரியேன் பாலகனாய்ப் பலதீமை கள்செய்து மிட்டேன்
பெரியேன் ஆயினபின் பிறர்க்கே யுழைத்தேழை யானேன்
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமா மலைவேங் கடவா
அரியே வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண் டருளே. 49

பள்ளியி லோதி வந்ததன் சிறுவன்
வாயிலோ ராயிர நாமம்
ஒள்ளிய வாகிப் போதவாங் கதனுக்
கொன்றுமோர் பொறுப்பில னாகி
பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்பப்
பிறையெயிற் றனல்விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்க மாகிய தேவைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. 50

மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையி னேடுசென் றிழிந்த
கானமர் வேழம் கையெடுத் தலறக்
கராவதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப்புள் ளூர்ந்து
சென்றுநின் றாழிதொட் டானை
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. 51

ஏழை யேதலன் கீழ்மகனென்னு திரங்கி
மற்றவற் கின்னருள் சுரந்து
'மாழை மான்மட நோக்கியுன் தோழி;
உம்பியெம்பி'என் றொழிந்திலை உகந்து
'தோழ னீயெனக் கிங்கொழி' என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட்
ஆழி வண்ணநின் அடியிணை அடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 52

இரும்புநன் றுண்ட நீர்போ லெம்பெரு மானுக்கு என்றன்
அரும்பெற லன்பு புக்கிட் டடிமைபூண் டுய்ந்து போனேன்
வரும்புயல் வண்ண னுரை மருவியென் மனத்து வைத்துக்
கரும்பினின் சாறு போலப் பருகினேற் கினிய வாறே. 53

தொண்டெலாம் பரவி நின்னைத் தொழுதடி பணியு மாறு
கண்டுதான் கவலை தீர்ப்பா னுவதே பணியாய் எந்தாய்
அண்டமா எண்டி சைக்கும் ஆதியாய் நீதி யான
பண்டமாம் பரம சோதி நின்னையே பரவு வேனே. 54

பாருருவில் நீரெரிகால் விசும்பும் ஆகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர்தம் திருவுருவே றெண்ணும் போது
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடலுருவம் ஒத்து நின்ற
மூவுருவும் கண்டபோ தொன்றும் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவம் தானே. 55

நீரகத்தாய் நெடுவரையின் உச்சி மேலாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்த கச்சி
ஊரகத்தாய் ஒண்துறைநீர் வெ.்கா உள்ளாய்
உள்ளுவார் உள்ளத்தாய் உலகம் ஏத்தும்
காரகத்தாய் கார்வானத்து உள்ளாய் கள்வா
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னும்
பேரகத்தாய் பேராதுஎன் நெஞ்சி னுள்ளாய்
பெருமான்உன் திருவடியே பேணி னேனே. 56

கூ. பொய்கையாழ்வார்

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன்சொல் மாலை
இடராழி நீங்குகவே என்று. 57

ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனை நான்
இன்று மறப்பனோ ஏழைகாள்—அன்று
கருவரங்கத் துள்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை. 58

குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக என்நெஞ்சே—என்றும்
புறனுரையே ஆயினும் பொன்னாழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு. 59

சொல்லுந் தனையும் தொழுமின் விழுமுடம்பு
செல்லுந் தனையும் திருமாலை—நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தால் ஏத்துதிரேல் நன்று. 60

கo. பூதத்தாழ்வார்

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். 61

அறிந்தைந்து முள்ளடக்கி யாய்மலர்கொண் டார்வம்
செறிந்த மனத்தராய்ச் செவ்வே—அறிந்தவன்றன்
பேரோதி ஏத்தும் பெருந்தவத்தோர் காண்பரே
காரோத வண்ணன் கழல். 62

யானே தவஞ்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்—யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது. 63

பின்னு லருநரகம் சேராமல் பேதுறுவீர்
முன்னுல் வணங்க முயல்மினோ—பன்னூல்
அளந்தானைக் கார்க்கடல்சூழ் ஞாலத்தை எல்லாம்
அளந்தா னவன்சே வடி. 64

கக. பேயாழ்வார்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று. 65

நாமம் பலசொல்லி நாராய ணாவென்று
நாமங்கை யால்தொழுதும் நல்நெஞ்சே—வாமருவி
மண்ணுலகம் உண்டுமிழ்ந்த வண்டறையும் தண்துழாய்க்
கண்ணனையே காண்கநம் கண். 66

கஉ. நம்மாழ்வார்

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிரளிப்பான்
எந்நின்ற யோனியும் ஆய்ப்பிறந் தாயிமை யோர்தலைவா
மெய்ந்நின்று கேட்டரு ளாயடி யேன்செய்யும் விண்ணப்பமே.

கார்கலந்த மேனியான் கைகலந்த ஆழியான்
பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான்—சீர்கலந்த
சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையி னாழ்துயரை
என்நினைந்து போக்குவரிப் போது. 68

கண்ணன் கழலிணை, நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம், திண்ணம் நாரணமே. 69

கழிமின் தொண்டீர்கள் கழித்துத்
தொழுமின் அவனைத் தொழுதால்
வழிநின்ற வல்வினை மாள்வித்து
அழிவின்றி ஆக்கந் தருமே. 70

யானே என்னை யறியகி லாதே
யானே யென்றன தேயென் றிருந்தேன்
யானே நீயென் உடைமையும் நீயே
வானே யேத்தும்எம் வானவ ரேறே. 71

புகழுநல் லொருவ னென்கோ பொருவில்சீர்ப் பூமியென்கோ
திகழும்தண் பரவை யென்கோ தீயென்கோ வாயுவென்கோ
நிகழுமா காச மென்கோ நீள்சுட ரிரண்டு மென்கோ
இகழ்விலிவ் வனைத்து மென்கோ கண்ணனைக் கூவு மாறே. 72

எனதாவி உள்கலந்த பெருநல் லுதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன் இனிமீள்வ தென்பதுண்டே
எனதாவி ஆவியும்நீ பொழிலேழும் உண்டஎந்தாய்
எனதாவி யார்யானார் தந்தநீ கொண்டாக்கினையே. 73

களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்
வளைவாய் நேமிப் படையாய் குடந்தைக் கிடந்த மாமாயா
தளரா வுடலம் என்ன தாவி சரிந்து போம்போது
இளையா துனதாள் ஒருங்கப் பிடித்துப் போத இசைநீயே. 74

அகல கில்லே னிறையுமென் றலர்மேல் மங்கை உறைமார்பா
நிகரில் புகழா யுலகமூன் றுடையாய் என்னை ஆள்வானே
நிகரில் அமரர் முனிக்க ணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன் றில்லா அடியேனுன் அடிக்கீ ழமர்ந்து புகுந்தேனே.

ஸ்ரீ ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்